# திறவுகோல்

2050 தை
மாத இதழ்

- மீளும் தமிழகம்
- தொட்டில் கட்ட  ஆசை....!!!
- ஆகா அமெரிக்கா
- நெகிழியாகிய நான்!
- ஈரக்குலையே நடுங்குதய்யா...

செண்பக வனம்

வெளியீடு
மன்னையின் மைந்தர்கள் அமைப்பு

மன்னையின் மைந்தர்கள்

*மண்ணின் மாற்றத்தை நோக்கி*

மாற்றங்களை பிறரிடம் எதிர்பார்க்காமல் எம்மிடம் இருந்து ஆரம்பிக்க வேண்டும் என எண்ணிய பல எளிய மக்கள் ஒன்று சேர்ந்து டிசம்பர் 26, 2014ம் தேதி முகநூலில் மன்னையின் மைந்தர்கள் குழு ஆரம்பித்து இன்று 4966 முகநூல் நட்புகளுடன் தொடர்ந்து பயணிக்கிறது.

இணையத்தில் மட்டும் இல்லாது களத்திலும் பல செயல்களை வெற்றிகரமாக செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக நம்மாழ்வார் ஏரியை தூர்வாரி மீட்டெடுத்தனர், நம்மாழ்வார் பூங்கா, மீத்தேன் திட்ட எதிர்ப்பு போராட்டங்கள், உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்களை கொண்டு நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம், கருவேல மரம் அழிப்பு (மன்னார்குடி தொடர்வண்டி நிலையம் அருகில்), நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு, இரத்த தான முகாம், கடலூர் வெள்ள நிவாரண உதவி, பூமியை காப்போம் கருத்தரங்கம் என பல உறுப்பினர்களின் ஒத்துழைப்புடன் சிறப்பாக நடைபெற்றது. தற்பொழுது அரிச்சபுரம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் அடிப்படை வசதிகளை சரி செய்து கொண்டு வருகிறார்கள்.

நோக்கம்

மக்களின் வாழ்வியலை மேம்படுத்துவதையும், இயற்கையை பேணி காப்பதையும் முதன்மையாக கொண்டு அதற்கு தேவையான விழிப்புணர்வை நாங்களும் பெற்று அதனை மக்களுக்கும் கொண்டு செல்வதே இவ்வியக்கத்தின் நோக்கம்.

# மீளும் தமிழகம்



G.S. விஜயவர்மன்

1991 ஆம் வருடம், இந்திய பொருளாதாரத்தின் அடித்தளத்தை மாற்ற முன்னெடுக்கப்பட்ட முயற்சிகள் பல இடங்களில் பல மாற்றங்களை உருவாக்கி இருப்பினும், தமிழகத்தின் கலாச்சார பண்பாட்டிற்கு பெரும் சேதத்தை ஏற்படுத்த ஆரம்பித்தன. அந்நாளின் நிதியமைச்சராக இருந்த டாக்டர். மன்மோகன் சிங் அவர்கள் தாக்கல் செய்த பட்ஜெட்டில் குறிப்பிடப்பட்ட மூன்று எழுத்துக்கள்  தமிழகத்தின் தலையெழுத்தை மாற்றி எழுதியது.

LPG என்று ஆங்கிலத்தில் சுருக்கிக் கூறப்பட்ட Liberalisation, Privatisation, Globalisation என்ற வார்த்தைகள் தான் அவை. தாராளமையமாக்குதல், தனியார்மையமாக்குதல், உலகமையமாக்குதல் என்ற கொள்கைகள் இந்திய நாட்டிற்கு கிடைத்த வரமென்பது ஒரு புறம் உண்மையாயினும், தமிழக கலச்சார வாழ்விற்கு சுரண்டடப்பட்ட குழியும்  அதுவே.

மென்பொருள் நிறுவனங்கள், தொழிற்சாலைகள், இரு சக்கர, நான்கு சக்கர வாகனத் தொழிற்சாலைகள் என வேலைவாய்ப்பை அள்ளித் தரும் பல நிறுவனங்கள் உள்ளே புகுந்தாலும், நம் உணவு பழக்க வழக்கத்தை மாற்ற நெடுநாட்களாக காத்துக் கொண்டிருந்த பல கார்ப்ரேட் நிறுவனங்களுக்கு அடித்தது ஜாக்பாட்.

எனினும், பல நூறு ஆண்டுகளாக மக்கள் வாழ்வாதாரத்தின் ஆணி வேராகயிருந்து வரும் உணவு முறைகளை மாற்றுவதென்பது அவ்வளவு எளிதல்ல. பல முயற்சிகளில் தோல்வியை தழுவிய நிறுவனங்கள், இந்திய சந்தையில் காலெடுத்து வைக்க வெறி பிடித்து ஓடத் தொடங்கியது. அவ்வாறு ஓடத் தொடங்கிய நிறுவனங்கள் பல குறுக்கு வழிகளில் தன் இலக்கை அடைய விரும்பின. அவற்றில் சில பின்வருமாறு:

1. மேகி: நன்கு வேகவைத்த இயற்கை உணவு பண்டங்களை உண்டு வந்த நம் நாட்டில் 2 மினிட்ஸ் நூடுல்ஸ் என்ற வாக்கியத்தை வைத்து தம் உணவு பொருட்களை விற்க இயலாத நெஸ்ட்லே நிறுவனம், பல நாட்களாக பல லட்சம் செலவு செய்து வெற்றியின் சூத்திரத்தை அறிந்து கொண்டது. ஒரு நாள் பொழுது விடிந்து தங்கள் வீட்டு வாசலை பெருக்கிக் கொண்டிருந்த பெண்கள், கண்களை கவரும் வண்ண பாலிதீன் கவர்கள் கிடப்பதை எடுத்து பார்த்தனர். (பக்கத்து வீட்டில் இருப்பவன் செய்வதை, உடனே செய்யும் பழக்கம் உள்ளவர்கள் இந்தியர்கள் என்பதை அறிந்த அந்நிறுவனம், இரவோடு இரவாக வெற்று பைகளை குப்பைத் தொட்டிகளில் கொட்டி நம் நாட்டில் கால் ஊன்ற தொடங்கிற்று).

2. கொக-கோலா: பழங்களின் சாறுகளை பெரும்பான்மையான மக்கள் அருந்தி

வந்திருப்பினும், உடலுக்கு பெரிதும் தீங்கு விளைவிக்காத கரியமூட்டப்பட்ட தண்ணீர் (Carbonated Water) என்று அழைக்கப்பட்ட சோடாக்கள், உள்ளூர் மக்களால் தயாரிக்கப்பட்டு விற்கப்பட்டு வந்தன. 777, சில்வர் கப், காளிமார்க் போன்ற குறு நிறுவனங்கள் தமக்கு போட்டியாக அமைவதை விரும்பாத கொக-கோலா நிறுவனம், மற்ற நிறுவனங்களின் தயாரிப்புகளை அதிக விலை கொடுத்து வாங்கி சாலைகளில் அவற்றை உடைத்தும், சில மாதங்கள் தங்கள் நிறுவனத்தின் குளிர்பானங்களை குறைந்த விலைக்கு விற்றும் சந்தையை கைப்பற்றியது.


3. கோல்கேட்: உங்க டூத்பேஸ்ட்-ல உப்பு இருக்கா? என கேட்கும் அதே நிறுவனம் தான், இந்திய சந்தையை கைப்பற்ற இன்னுமா உப்பையும், கரியையும் வச்சி பல் துலக்குறீங்க? என்று 1990 களில் விளம்பரம் செய்ய தொடங்கியது. பற்பசையின் வெண்மை நிறத்திற்காக, மனிதர்களின் சிந்தனை ஆற்றலை சிதைக்கும் தன்மை கொண்ட ஃப்ளூரைட் எனப்படும் ரசாயணம் உபயோகிக்கப்படுகின்றது. இதனை வெளிப்படையாக அச்சிட்டு விற்பனை செய்து வந்த நிறுவனம், பற்களின் உறுதிக்கு உப்பு அவசியம் என்பதை உணர்ந்து Active Salt என்ற பற்பசையை தற்போது விளம்பரம் செய்தும் வருகின்றது.

கார்ப்ரேட் நிறுவனங்கள் பல சூழ்ச்சிகளை கையாண்டிருப்பினும், வெகு விரைவில் அவற்றின் முகத்திரையை கிழித்து, பாரம்பரியத்தை நோக்கி மீண்டும் படையெடுக்கும் மாநிலம் தமிழகம் என்பதில் மிக்க மகிழ்ச்சி. அடுப்பாங்கரை, விவசாயி போன்ற பெயர்களில் உணவகங்களும், இயற்கை அங்காடி, அஞ்சறைப் பெட்டி போன்ற பெயர்களில் மளிகை கடைகளும், மரச் செக்கு நிலையங்களும் உதயமாவதில் பேருவகை.

இருப்பினும், நீங்கள் எழுதிய கட்டுரையில் கூறியுள்ளீர்கள் என்றோ பக்கத்து வீட்டில் பயன்படுத்துகின்றனர் என்றோ எவற்றையும் பின்பற்றாதீர். எல்லாவற்றையும் பற்றி அறிந்து தெளிவு பெற்று, அதனை உபயோகித்தல் நலம். இந்தியாவில் உள்ள மற்ற மாநிலங்களுக்கு, தமிழகம் ஒரு முன்னோடியாக செயல்படுகிறது என்றால் அது மிகையாகாது. மீளும் தமிழகத்துடன் நாமும் விடியலை நோக்கி பயணிப்போம்!

--

G.S. விஜயவர்மன்
கைப்பேசி: +91 95784 70701
வலைப்பூ: vjwarman.wordpress.com



## மன்னார்குடி ரா. ராஜேஷ்

எழுதும் தொடர் முதல் அத்தியாயம் (பகுதி 9)

# செண்பக வனம்

மூடுபனி மெல்ல மெல்ல விலக தொடங்கிய அந்த அதிகாலை பொழுதில் நம் கதை மாந்தர்கள் பேசிக்கொண்டிருக்கும் இடமானது.

ராஜபாதையில் இருந்து சற்று விலகி காட்டுக்குள் இருந்தமையாலும் அவர்களின் பேச்சுக்கள் தங்களுக்குள் கேட்கும் வண்ணம் மிகவும் சப்தம் குறைவாக பேசிக்கொண்டு இருந்தமையாலும் வெளி ஆட்களோ மற்றவர்களோ இவர்களை கவனிக்கும்  வாய்ப்புகள் மிகவும் குறைவாக இருந்தன.

ருத்ரன் தான் கண்ட எல்லாவற்றையும் சொல்லிமுடித்த நிலையில் இராஜபாதையில் சின்னதாய் சலசலப்பு ஏற்பட்டது. அதனால் மூவரும் அங்கிருந்து கலையமுற்பட்ட நேரத்தில் ருத்ரணிடம் ''ருத்ரா இவர்கள் மீதான கண்காணிப்பை தீவிரப்படுத்து. அந்த மாறுவேடகாரனிடமிருந்து எந்த தகவல் கிடைத்தாலும் கண்டராதித புரத்திற்கு வா.'' இப்போது நீ இங்கிருந்து முதலில் செல் நாங்கள் பிறகு இங்கிருந்து புறப்படுகிறோம்'' என்றார் சசிதரனோடு வந்தவர்.

ருத்ரனும் அவர்களிடமிருந்து விடை பெற்று சத்திரத்திற்கு திரும்பினான்.

''சசிதரா கோட்டைக்கும் மாரி ராஜனுக்கும் ஓலை எழுதிக் கொள், கோட்டைக்கு எழுதும் ஓலையில் சக்கரவர்த்தி எங்கு இருக்கிறார் கோட்டை காவல் யாரிடம் உள்ளது, அம்பலவாணர் எங்கு இருக்கிறார் என்று நிலவரம் அறிய வேண்டும்.

''மாரி ராஜரையும் சின்னப் பழுவேட்டரையரையும்'' எங்கிருந்தாலும் கோட்டைக்குள் வரச்சொல்'' என்றவர் ''ஓலை முடித்துவிட்டு குதிரையை ஆயத்தப்படுத்து, நான் இதோ வருகிறேன்'' என்று கூறிவிட்டு சசிதரனின் பதிலைக் கூட எதிர்பாராமல் அந்த இடத்தை விட்டு கிளம்பினார். காட்டுக்குள் நுழைந்து மூன்று சத்திரங்களையும் ஒரு முறை நோட்டம் விட்டுவிட்டு வருவதற்குள் சசிதரன் குதிரையை ஆயத்தப்படுத்தி இருந்தார். இருவரும் வந்த பாதையிலேயே திரும்பவும் பயணிக்கலானார்கள் திருவண்ணாமலை நோக்கி.

அந்த நிகழ்வுக்காய் காத்திருந்தவன் போல நின்றிருந்த அந்த மாறுவேடகாரன் அந்த இரண்டு குதிரைகளையும் பின் தொடர ஆரம்பித்தான் அவனை கண்காணிப்பது மட்டுமே தலையாயக்கடமையாக ஏற்றிருந்த ருத்ரனும் மாறுவேடக்காரனை பின்தொடர்ந்தான்

வில்லிலிருந்து புறப்பட்ட அம்பு போல சீறி பாய்ந்தது இரண்டு குதிரைகளும். அத்தனை வேகத்தில் குதிரைகள் சென்று கொண்டிருந்த போதும் நமது சசிதரன் தனது குதிரையின் பக்கவாட்டில் இருந்த பையில் இருந்து தோலாலான உறை ஒன்றை எடுத்து தனது கையில் கட்டிக் கொண்டார். தோள்பட்டை உயரத்திற்கு பக்கவாட்டில் கையை உயர்த்தி அடி தொண்டையில் இருந்து ஒரு சப்தம் எழுப்பினார். இரண்டு மூன்று முறை அதே போல சப்தம் எழுப்பினார். இந்த செயல்கள் யாவும் செய்து கொண்டிருக்கையில் குதிரை அத்தனை வேகமாக சென்று கொண்டிருந்தது. அதன் வேகம் சற்று கூட குறையவில்லை. இவர் எழுப்பிய சப்தத்திற்கு மறுபடி செய்வது போல ஆகாயத்தில் இருந்து ஒரு குரல் கேட்டது, அது கழுகின் குரல் போல் இருந்தது. அடுத்த நொடியில் அந்த சப்தம் அவர்கள் காதின் அருகில் கேட்டது. ஆம் பறந்து வந்த கழுகு, அவர் கையில் அமர்ந்தது. அதனை லாவகமாக பிடித்த சசிதரன் தனது மார்போடு அணைத்துக்கொண்டு தான் முன்னமே எழுதி வைத்திருந்த ஓலைகளில் கோட்டைக்கான ஓலையை அதன் காலில் உள்ள கோப்பையில் வைத்து கட்டி மீண்டும் பறக்க விட்டார். மீண்டும் அதே போல தனது கையைப் பக்கவாட்டில் உயர்த்தியவர் வேறு விதமாக ஒலி எழுப்பினார். இரண்டு மூன்று முறை எழுப்பியிருப்பார், அதேபோல வேறு ஒரு கழுகு அவர் கையில் வந்து இறங்கியது அதனையும் மார்போடு அணைத்து மாரிராசருக்கான ஓலையை எடுத்து அதன் காலில் கட்டி அதையும் பறக்க விட்டார். இந்த பணிகள் முடிந்து கொண்டிருக்கும் நிலையில் திருவண்ணாமலை நெருங்கிவிட்டார்கள் இருவரும்..

திருவண்ணாமலை
மேகம் மூடிய மலையின் கரை.
அண்ணாமலையார் கோவில் அலுவல மண்டபத்தின் அடுத்தாற்போல் ஒரு கூடாரம் அதன் மைய தூணின் உச்சியில் காற்றின் திசைக்கு ஏற்றார்போல் ''சடசட படபட'' என்று அடித்துக்கொண்டு ''புலிக்கொடி'' பறந்து கொண்டிருந்தது அந்த கூடாரத்தின்

ஆடம்பரமும் அழகும் கம்பீரமும் அது ஒரு அரச குடும்பத்தார் தங்கியிருப்பார்களோ என்று எண்ணத் தோன்றியது . அந்த எண்ணம் சரியானது தான் என்பது போல அந்த கூடாரதிற்கு அமைக்க பட்டிருந்த பாதுகாப்புகள் உறுதிப்படுத்தின .

அண்ணாமலையாரின் அதிகாலை தரிசனத்தை முடித்துவிட்டு கோவிலிருந்து ஐந்து நபர்கள் வெளியே வந்தார்கள். இருவர் முன்பும் இருவர் பின்னாலும் வர நடுநாயகமாக வந்தார் ஒருவர்.

கழுத்தில் ருத்ராட்சம், நெற்றியிலும் மார்பிலும் கைகளிலும் திருநீறு கமல அந்த வசீகர முகத்தில் அரும்பியருக்கும் மீசை கம்பீரத்தை கூட்டியது. கருணையும் தெய்வீகமும் கலந்த ஒளியில் மின்னும் அவரின் கண்கள், அவரை காண்பவர் யாரையும் அவருக்கு கட்டுபட வைக்கிறது. இறைவனுக்கு தொண்டு செய்வது மட்டுமே தன் பிறவியின் நோக்கம் என்று மாற்றிக்கொண்ட அந்த திருமகன் சோழ நாட்டின் இளவரசன் சிவனருள் செல்வரும் சோழ சக்கரவர்த்தியுமான உத்தம சோழரின் திருமகன் தான் அவர் ‘‘மதுராந்தகன்’’.

கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கிய நமது இளவரசர் மதுராந்தக சோழர் தனது பாட்டியார் செம்பியன் மாதேவியின் அன்பு கட்டளைக்கிணங்க செம்பியன் மாதேவியார் செய்துவரும் திருப்பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்த இடங்களுக்கெல்லாம் சென்று களஆய்வு பணிகளை மேற்கொண்டிருந்தார்.

அதன் பொருட்டு அண்ணாமலையார் சன்னதியில் விரிவாக்க பணிகள் நடந்து கொண்டிருந்த திருவண்ணாமலைக்கு வந்திருந்த மதுராந்தகர் அங்கேயே தங்கியிருந்தார் .அவர் செல்லுமிடமெல்லாம் தனியாக கூடாரம் அமைத்துத் அங்கு தங்குவது அவரது இயல்பு. இப்படியான ஒரு நாளின் அதிகாலையில் அண்ணமலைநாதரை தரிசித்துவிட்டு வரும் நமது இளவரசரை தரிசிக்க மலைகுறவர்களின் தலைவர் மலையரசன் அவரது சகாக்களும் ‘‘தேன்‘‘ ‘‘திணைமாவு’’ ‘‘செவ்வாழை’’ ‘‘வேர்பலாப்பழம்’’ என பல அன்பளிப்புகலுடன் காத்திருந்தார்கள்.

மதுராந்தகர் கூடாரத்திற்கு வரும் முன்னே வெளியே கூட்டம் நிற்பதை கண்டு மலையரசர் தான் ஊகித்து கொண்டவர், நடையை வேகப்படுத்தி வந்தார். இளவரசரை கண்ட மலையரசர் மண்டியிட்டு தலைவணங்கி வணக்கம் செலுத்தினார். அதனை முற்றிலும் விரும்பாத இளவரசர், அவரை வாரி எடுத்து அணைத்துக் கொண்டார் ‘‘என்னய்யா இது என்னைவிட வயதிலும் அறிவிலும் பண்பிலும் மூத்தவர் நீங்கள்?

என்னை இப்படி வணங்கலாமா? எப்போதுமே வணக்கத்திற்குரியவர் அவன் மட்டுமே! அவன் சிவன்‘‘ என்று சொன்னவர் கோபுரத்தின் பக்கம் திரும்பி எல்லோரும் ஒன்றாய் நின்று அண்ணாமலையார் கோவிலை ஒரு முறை வணங்கினார்.

''மலையரசரே வாருங்கள், உள்ளே அமர்ந்து உங்களிடம் பேச பல விஷயங்கள் உள்ளன'' என்று மலையரசனின் கையை பிடித்து உள்ளே இழுத்துச் சென்றார் இளவரசர், இருவரும் எதிரெதிரே அமர்ந்திருந்தனர். இளவரசரே தொடர்ந்தார் ''நான் உங்களை நேற்று வரை எதிர்பார்த்து இருந்தேன், இன்று நீங்கள் வரவில்லை என்றால் நானே நாளை மலையேறி இருப்பேன் நல்லவேளையாக நீங்களே வந்துவிட்டீர்கள் எப்படி இருக்கிறீர்கள் ? '' என்றார்.

புன்னகை பூத்த முகத்துடன் இளவரசரை பார்த்துக்கொண்டிருந்த மலையரசர் ''நான் மிக நலமுடன் உள்ளேன். நீங்கள் எப்படி உள்ளீர்கள்?. நான் நாளை மாலை தான் உங்களை வந்து சந்திக்க வேண்டும் என்று இருந்தேன். ஆனால் நேற்று இரவு பாதிக்குமேல் நமது வேட்டை குழு கொண்டு வந்த செய்தி என்னை இன்றே இப்போதே காலையிலேயே உங்களை சந்திக்க வைத்தது. திருக்கோவிலூரிலிருந்து திருவண்ணாமலை வரும் வழியில் முச்சந்தி சத்திரம் அருகே வழக்கத்திற்கு மாறாக பெரும்பாலானவர்கள் தங்கியிருக்கிறார்கள். தோராயமாக 800 இருக்கலாம் என்று நமது வேட்டை குழுவினர்கள் வந்து சொன்னார்கள்''. என்று மலையரசன் பேசிக்கொண்டிருக்கும் பொழுது கூடாரத்தின் வெளியே சிறு சலசலப்பு. இளவரசரும் மலை அரசரும் ஆச்சரியப்பட்டு இருக்கையிலிருந்து எழுவதற்குள் கூடாரத்தின் கதவு போலிருந்த திரைசீலைகள் விளக்கப்பட்டு சசிதரன் உள்ளே வந்தார். அவரைக் கண்ட இளவரசர் அடடே வாருங்கள் அரசூர் பல்லவராயர் சசிதரரே வாருங்கள் என்று கூறிக்கொண்டே. வணங்க போன சசிதரனின் கைப்பற்றிக் கொண்டார் நீங்கள் வந்திருக்கிறீர்கள் என்றால் அண்ணனும் வந்திருப்பாரே.! என்று சொல்லிக்கொண்டே கூடார வாயிலை நோக்க உள்ளே நுழைந்தார்.

சோழ வளநாட்டின் காவலரும் சந்திர சூரியன் உள்ளவரை சரித்திரத்தின் ஒப்பற்ற மாமன்னருமான நமது ராஜராஜ சோழர் ..

அன்று அப்போது. பொன்னியின் செல்வராய் அருமொழிவர்மராய் அந்த கூடாரத்தின் உள்ளே நுழைந்ததும்.

''அண்ணா'' என்று அழைத்துக்கொண்டே ஓடிச் சென்று அனைத்து கொண்டார் இளவரசர் மதுராந்தகர். அந்த காட்சி வெகுநாள் கழித்து தந்தையைக் காணும் மகன் ஓடிச்சென்று தந்தையைப் பாசத்தோடு கட்டிக் கொள்வது போல இருந்தது. ''மதுராந்தக என்ன இப்படி மெலிந்து விட்டாய், உன் முகத்தில் மீசை கூட அரும்பிவிட்டது'' என்று சொல்லிக்கொண்டே அதனை முறுக்கி வைத்து அழகு பார்த்த அருமொழிதேவரிடம் இளவரசர் ''அண்ணா உங்களை நேரில் பார்த்து எத்தனை நாட்கள் ஆகிவிட்டன''. ''நான் எங்கிருக்கிரேன்! எப்படி இருக்கிறேன்! என்று எல்லாம் தெரியும் ஆனாலும் ஒருமுறை கூட வரமாட்டீர்கள் இன்று இங்கு வந்ததற்கும் வேறு முக்கியமான காரணங்கள் இருக்கும் அப்படித்தானே? அண்ணா'' என்றார்.

வாய்விட்டு சிரித்துகொண்டே மதுராந்தகரை பார்த்த அருமொழிதேவர் ‘‘உண்மைதான் மதுராந்தகா உண்மைதான்‘‘
‘‘நான் உன்னை மட்டும் காண வரவில்லை இதோ இங்கே சிலை போல  நிற்கும் மலைஅரசரையும்  பார்க்கத்தான் வந்தேன்’’

என்று கூறிக்கொண்டே மலையரசரின் தோள்களை பிடித்து உலுக்கினார் பொன்னியின் செல்வர். சுயநினைவுக்கு வந்த மலையரசர், இளவரசே! இது உண்மைதானா நீங்கள் பொன்னியின் செல்வர்தானா என்று அவர் உதடுகள் வார்த்தைகளை உதிர்த்தாலும். உடல் நடுங்கியது கண்கள் நீர் வடிந்தது.

என் மன்னா ! என் வேந்தே ! நீங்கள் இப்படி செய்யலாமா, மூன்று மாதங்களுக்கு முன்பு எங்கள் மலைநாட்டிற்கு வந்தவர்கள் தானே?‘‘ என்றார் மலையரசன்.

‘‘வாருங்கள் என்னுடன் அமருங்கள்‘‘ என்று அவரின் கையைப் பிடித்து அழைத்து வந்து தனது பக்கத்தில் அமர்த்தி அருமொழிதேவர் ‘‘ஆமாம் மலையரசரே அன்று உங்களுடன் அந்த மலைக் காட்டில் வேட்டைக்கு வந்து வேட்டையாடியதை விருந்தாக உண்டு உங்களுடன் மகிழ்ந்திருந்தது நான் மட்டுமல்ல இதோ  இங்கு நிற்கும் பாம்புனி கூற்றது அரசூர் வீரன் சசிதர பல்லவரும் தான் .

ஆனால் அன்றைய எங்கள் உடல்மொழியும் பாவனையும் வேடமும் வேறு அதை இவ்வாறு கண்டுபிடிக்கும் சாதுர்யமும் சாமர்த்தியமும் தான் என்னை இன்று இங்கு வரவழைத்தது.

நான் நேரடியாக விசயத்திற்கு வருகிறேன்.

என் கணிப்பு சரி எனில்  முச்சந்தி சத்திரத்தில் என்ன நடந்துகொண்டிருக்கிறது என்று உங்களுக்கு தெரிந்திருக்க வேண்டும். அதன் வீரியத்தை உணர்ந்த நீங்கள் இளவரசரிடம் எச்சரிக்கை செய்ய வந்துள்ளீர்கள் அப்படித்தானே‘‘? என்றார்  தேவர். இளவரசர் மதுராந்தகரும் மலையரசரும் திகைப்பு நிறைந்த விழிகளுடன் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

மலையரசரே தொடர்ந்தார் ‘‘உங்களின் தீர்க்கதரிசனத்திற்கு முன்னால் நாங்கள் சிறுபதர்கள். நீங்கள் சொன்னது முற்றிலும் உண்மை. நீங்கள் வருவதற்கு முன் நான் இந்த விவரங்களைதான் இளவரசரிடம் பேசிக்கொண்டிருந்தேன்‘‘. என்றார்.

வந்தவர்கள் யார்...?

## பயணம் தொடரும் ...

# தொட்டில் கட்ட ஆசை....!!!

என் தாய் அவள் வயிற்றில்
தொட்டில் கட்ட பத்து மாதம்
இருந்தவள் தான் நானும்...!!

இன்று என் வயிற்றில் தொட்டில்
கட்ட பாடுபடுபவள்தான் நானும்...!!

ஆராரோ சத்தம்
ஆங்காங்கே கேட்க
அடிவயிற்றை
தடவி பார்க்கிறேன்
தினம் தினம்...!!

அக்கம் பக்கம் ஆயிரம்
சொல்ல பாலும் கிணற்றை
எட்டி பார்க்கிறேன் அதே கணம்....!!!

கட்டியவன் கரம் கொடுத்தாலும்
கட்டில் கை கொடுக்க மறுக்கிறது
அனுதினம்

அலுத்து போக நானும் ஆயுள்
முடியாத என்று முத்தி போகிறது
மனம் அதே கணம்

அத்தையவள் செத்தையென
ஏச தினம் தினம் செத்து
பிழைக்கிறேன்

மனம் வாழ வாழ்த்திய
மகராசர்கள் வாக்கு எல்லாம்
வெளிச்சம் ஆகாதா என்று
எண்ணி பார்க்கிறேன்
தினம் தினம்

வெட்ட வெளியில்
வெறும் வயிற்று சிறுக்கி என்று
ஒளிந்து மறைந்து
வாழ்கிறேன்
கணம் கணம்

என் கட்டிய சேலை
காத்து வாங்க
கரம் பிடித்தவன்
கை ஓங்குகிறது
தொட்டில் எங்கேயென
கேட்டு தினம் தினம்

என்ன சொல்வேன் எப்படி
சொல்வேன் எனக்கும்
தொட்டில் கட்ட
ஆசை தான் என்று

மலடி என்ற
பெயரடுத்த பின்பும்

இங்கு நான் ....????

--

**ஆரூர் கவிஞன் தீன்**
பொதக்குடி

# அன்புள்ள அம்மாவிற்கு....


மணிபாரதி தங்க சுந்தர்

உதிரத்தில் உயிராய் எனைப் பெற்று
கருவாய் சுமந்து - உருவாய் வடித்து

அனுதினமும் அன்பு எனும் சத்தான உணவை வழங்கி ஒவ்வொரு
நொடியும் எனக்காக இயங்கியவளே...

கால் நூற்றாண்டை கடந்த பின்பும் இன்று வரை கால் சட்டை
போட்ட சிறுவனை போல் எனை கவனிப்பவளே....!

எனக்காக அனுதினமும் பல கனவுகளை அர்பணிப்பவளே....

அன்பு எனும் மொழியை கொண்டு நீயோ இசைபாடுகிறாய்-அனுதினமும் அதை
கேட்டு நானோ இளைப்பாறுகிறேன்...!

அனைத்து உறவாய் கண்முன்னே காட்சி அளிப்பவளே....!

அளவில்லா அன்பை கொண்டு என்னுள் ஆட்சி புரிபவளே...!

அழகு யாதெனில் உன் குணம் என்பேன்....!

அமிர்தம் யாதெனில் நீ தரும் உணவென்பேன்...;

தென்னை ஓலைக் கொண்டு உலை வைத்து மூன்று வேளை எனக்கு பிடித்த உணவை
மூச்சு பிடித்து செய்து பசியாற்றுவாய்...!

பொன்நகையை கொண்டு உன்னை நான் அலங்கரிக்க மறந்தாலும் புன்னகையை தந்து
எப்போதும் எனை அரவணைப்பாயே அம்மா..

உன் நலம் வேண்டி நான் எந்த கடவுளையும் வணங்கியது இல்லை-உன்னை தாண்டிய
கடவுள் எனக்கு ஏதுமில்லை....

-மணிபாரதி தங்கசுந்தர்

# ஆகா அமெரிக்கா



ஸ்ரீ பிரியா சுந்தர்

அவருக்கென்ன அவர் பையன் அமெரிக்கால வேலை பாக்குறான்! அவங்க பொண்ண அமெரிக்கால வேலை பாக்குற மாப்பிளைக்கு கட்டிக்கொடுத்துருக்காங்க. இப்படி பலர் பேச கேட்டுருக்கோம், அப்படி என்னதாங்க அமெரிக்காவுல இருக்குது.

என் பெயர் ஸ்ரீபிரியா சுந்தர் மேலே சொன்ன லிஸ்டுல நானும் ஒருத்தி. திருமணம் முடிந்த ஒரு மாதத்தில் அமெரிக்கா புறப்பட்டு வந்து இங்கு மிசௌரி மாநிலத்தில் ஒரு ஊரில் கடந்த 4 வருடங்களாக வசித்து வரேங்க. கம்ப்யூட்டரிலும், மொபைல் வால்பேப்பரிலும் பார்த்து ரசித்த அமெரிக்காவை நேரில் வந்து பார்த்தபோது ’வாவ்’ என சொல்றமாதிரி இருந்தது.

சாலை விதிகள், சாலை விதிகளை அவங்க கடைபிடிச்சி கார்களும் பேருந்துகளும் போகுற அழகே தனிதாங்க. ஒரு காருக்கும் அடுத்த காருக்குமான இடைவெளி, அவர்கள் செல்லும் அழகே தனி! ஏதோ வீடியோகேம்ல பாத்த மாதிரி அவ்வளவு அழகு. நம்ம ஊர்ல இடதுபக்கம் செல்வது சட்டம், அமெரிக்காவுல வலதுபக்கம் தான் சட்டம். கார்ல போறவங்க எல்லாரும் கண்டிப்பா சீட்பெல்ட் போடணும், அதை யாரும் மீறுவதில்லை. பிறந்த குழந்தைகளைக் கூட குழந்தைகள் இருக்கையில் தான் உட்காரவெச்சி பெல்ட் போட்டுதான் காரில் அழைத்துப்போகணும். எந்த குழந்தையும் அதற்காக அழுவதில்லை. சாலையில் ஆம்புலன்ஸ், தீயணைப்பு வண்டி வந்தால் உடனே அதற்கு வழிவிட்டு பின்னர்தான் போவாங்க.

வார விடுமுறை

வாரக் கடைசி விடுமுறை நாட்களை நல்ல ஜாலியா அனுபவிக்கிறாங்க. இந்த விடுமுறையோடு பண்டிகை விடுமுறையும் சேர்ந்து வந்தால் குடும்பத்தோடு மூட்டை முடிச்சிய கட்டிக்கிட்டு சுற்றுலா தலங்களுக்கு கிளம்பிடுவாங்க. எந்த பொருள் வாங்க வேண்டுமானாலும் வரிசையில் நின்று வாங்குவது, அதே பழக்கத்தை குழந்தைகளுக்கும் சொல்லி வளக்குறாங்க.

முதியோர்கள் / மாற்றுதிறனாளிகள்
முதியோர் மற்றும் ஊனமுற்றோருக்கு முன்னுரிமை தராங்க. யாருடைய உதவியும் இல்லாமல் முதியோர் தன் வேலையை தானே செய்துக்கிறாங்க

ஷாப்பிங்

எல்லாவகை காய்கறிகளும் பழங்களும் ஃப்ரெஸாக கிடைக்கிறது. நம் தேவைக்கு ஏற்ப

நாமே எடுத்த பின் க்யுவில் நின்று பில் போடும். வீட்டு உபயோகப்பொருட்கள் நாம் வாங்கி வந்தபின் அது பிடிக்கலைன்னா 30 நாட்களுக்குள் ரிட்டன் பண்ணிவிட்டு முழுத்தொகையும் பெற்றுக்கொள்ளலாம். இந்த கான்செப்ட் நல்லா இருக்குல!

குழந்தை வளர்ப்பு

குழந்தை பிறக்க பிரசவ ஆஸ்பத்திரி போனால் 99% சுகப்பிரசவம்தாங்க. பிரசவ நேரத்தில் அருகில் கணவர் இருந்து பார்த்துக்கலாம். மனைவி பிரசவ வலியில் துடிப்பதைத் பார்த்து கணவர் கண்ணீர் விடுவதைக் காணலாம். குழந்தை பிறந்து 6 வது மாதம் முதல் தனியறையில் படுக்க வைக்கும்படி  மருத்துவர் சொல்லுவார்.அந்த அறையில் குழந்தை அழுதால் உடனே தெரியுற மாதிரி மானிட்டர்  ஒன்று வச்சிடுவாங்க. அந்த அறை முழுவதும் குழந்தைகளுக்கு பிடித்த வண்ணங்களும், பொம்மை ஸ்டிக்கர்களும் ஒட்டிவிடுவாங்க. அதைப்பார்த்து குழந்தை வளரணும்ணு ஆசைப்படுவாங்க.

இந்த நாட்டுச் சட்டப்படி குழந்தைகளை பெத்தவங்களே கூட அடிக்கக் கூடாது, அப்படி அடித்து அந்த பிள்ளைகள் சைல்ட்கேர் எண்ணில் புகார் பண்ணிட்டாங்கனா பெத்தவங்க கம்பி எண்ணும். குழந்தைகளுக்கு பிளீஸ், தேங்க்யூ போன்ற நல்ல பழக்கங்களை சொல்லி வளக்கறாங்க. வீட்டிலும் சரி, வெளியே சென்றாலும் சுத்தமாக இருப்பதோடு குப்பைகளை குப்பைத்தொட்டியில் போடுவது,சாலையில் எச்சில் துப்பாமலும் சிறுநீர் கழிக்காமலும் நல்ல பழக்கத்தோடு வளக்கிறாங்க.

குழந்தைகள் கீழே விழுந்தால் கூட தானே எழுந்திருக்கணும்ணு நினைப்பாங்க.

குடும்ப வாழ்க்கை

அமெரிக்கர்களின் பசங்க பள்ளி படிப்பு முடிச்சிட்டு கல்லூரிக்கு போகும்போது குடும்பத்தை விட்டு பிரிஞ்சி போய் ஏதேனும் பகுதி நேர வேலை பார்த்து அவங்க தேவைகளை அவங்களே பார்த்துக்கிறாங்க. முக்கிய பண்டிகை நாட்களான கிருஸ்துமஸ், புது வருட பிறப்பு போன்ற நாட்களில் குடும்பத்தாருடன் இருந்து விருந்து சாப்பிட்டுவிட்டு ’bye bye’ சொல்லிட்டு போயிடுவாங்க

எளிய திருமணம்

திருமணம் எல்லாம் இங்கே ரொம்ப சுலபம், நம் ஊரைப் போல நிச்சயம் பண்ணி 3 மாசம் கழிச்சி கல்யாணம் அதற்கு புடவை, நகை தேர்வு  பாத்திரங்கள் வாங்க அலைவதும் பத்திரிக்கை அடித்து உற்றார் உறவினர் அனைவருக்கும் வீட்டுக்குச் சென்று கல்யாணத்துக்கு அழைப்பது போன்ற வேலைகள்இருக்கும். இங்கு அதெல்லாம் ரொம்ப சுலபம் மின்னஞ்சலில் பத்திரிக்கை அனுப்பி வைத்து 10 முதல் 20

நாட்களுக்குள் சுலபமாக முடித்து விடுவார்கள் .இங்க நெருங்கிய 10 உறவினர் நண்பர்களை வைத்து கல்யாணம் முடிச்சிடுறாங்க.

உணவு முறை

பெரும்பாலும் அமெரிக்கர்களின் உணவு பர்கர்,கோழி வகைகள், பிரெஞ்ச் பிரைஸ் தான். ஆனால் மத்திய நாட்டு உணவான நூடுல்ஸ், பாஸ்தா, பிட்சானு அதையும் விரும்பி சாப்பிடுவாங்க. எல்லா வேலைக்கும் இயந்திரம் வந்ததால் பாதிபேர் உடல் எடை அதிகரிக்க ஆரம்பிச்சாதாக கணிப்பு ஒன்று சொல்லுது.

மருத்துவம்

இங்க நம்ம ஊரப்போல நினைச்சவுடன் டாக்டரை பார்க்க முடியாது. இன்று அப்பாயின்மெண்ட் கேட்டால் பத்துநாள் கழிச்சிதான் கிடைக்கும். சிகிச்சை நல்லா இருக்கும். ஆனால் பெட்டில் சேர்ந்தால் சொத்தையே எழுதி வாங்கிடுவாங்க.. இங்கு எல்லோருக்கும் ஹெல்த் இன்சூரன்ஸ் கட்டாயம்.

செல்ல பிராணிகள்

இந்த நாட்டில் செல்லபிராணிகளான நாய், பூனைகளை வீட்டில் குழந்தைகளைப் போல செல்லமாக வளர்ப்பர். குழந்தைகளுக்கு பழக்கப்படுவதுபோல அதுங்களுக்கும் தனியிடத்தில் மலம் கழிக்க பழக்கி விடுறாங்க. தெருக்களில் எந்த பிராணிகளையும் பார்க்கமுடியாது. நாய்,பூனைகளுக்கும் பிறந்தநாள் கொண்டாடி மகிழ்வர்.. அதுங்களுக்கென்றே துணி டயாபர் விற்கும் கடைகளுண்டு.

இந்தியர்கள் பற்றி அமெரிக்கர்களின் பார்வை

நம் இந்தியர் பற்றி அமெரிக்கர்களின் பார்வை காரசார உணவு, அழகான ஆபரணங்கள், வெப்பமான ஊர், பிரமாண்ட திருமணங்கள், நம் குடும்ப கலாச்சாரம் இவைகளைப் பற்றி அதிசயமாக கேட்டறிவாங்க. நம் பெண்கள் புடவை கட்டி வந்தால் அருகில் வந்து ’ஸோபியூட்டிபுல் டிரஸ்’ என சொல்லுவாங்க மற்றும் குழந்தைகள் அணியும் கொலுசு வளையல்களை பார்த்து அதிசயமாக ரசிப்பாங்க.

இதுதாங்க அமெரிக்கர்களின் வாழ்க்கை. பிரமிப்பாக உள்ளதா!
மீண்டும் சந்திப்போம்.

--
ஸ்ரீ பிரியா சுந்தர்

# உழுதுண்டு வாழ்பவரே வாழ்வர் மற்றவர் தொழுதுண்டு பின்செல்பவர்

என்று அழகாக அழுத்தமாக சொல்லிவிட்டு சென்றார் வள்ளுவர், ஆனால் இன்றைய விவசாயி ஆளும் அரசியல்வாதிகளால் படும் அல்லல்களும் அவஸ்தைகளும் ரத்தக்கண்ணீர் வரவழைக்கிறது. அரசு சில மானியங்கள் கொடுக்கலாம், சில கடன்கள் தள்ளுபடி (சில மாநிலங்களில்) ஆனால் அதில் பயனடைவோர் யாரெனப்பார்த்தால் அரசியல்வாதிகளுக்கு ஜால்ரா அடிப்போரும் சில வசதியானவர்களும்தான்.

கடைநிலையில் உள்ள விவசாயிக்கு எதுவும் சென்று சேர்வதில்லை,அவன் இதற்காக வேலையை போட்டுவிட்டு அலைபவனுமில்லை.
தன்மானத்துடன் விவசாயத்தை நம்பி இருப்பவனுக்கு இயற்கை சீற்றத்தின் போதும் மற்றும் பருவமழை தவறும்போதும் ஆட்சியர்கள் மேற்பார்வையில் அவர்களுக்கு தேவையான உதவி செய்தால் விவசாயம் தழைக்கும், நாடு முன்னேறும்.

இதை விட்டு விவசாய நிலத்தில் மீத்தேன் எடுக்க, கார்பன் ஹைட்ரோ வாயு எடுக்க அரசு ஏலம் விடுவதும் உயர் அழுத்த மின்வழி அமைப்பதும் 8 வழிச்சாலை அமைக்க விவசாய நிலம் கையகப்படுத்துவதும் அரசு மக்களுக்கு செய்யும் துரோகம் அல்லவா! இந்நிலை நீடித்தால் விவசாயம் என்னாகும்? அந்நிய நாட்டிலிருந்து அரிசி வாங்கும் அவலநிலை வரும். ஏழ்மைநிலையில் உள்ளோர் பசி பட்டினிக்கு ஆளாவார்கள். சிந்திப்போம், செயல்படுவோம்.



நெல்லை மு.தமிழ்த்தியாகன்
+91 8838513215

# இன்றைய கல்வி


அருள்பாண்டியன்

இன்றைய கல்வி மாணவர்களின் சிந்தனையை மழுங்க தான் செய்கிறது

இங்கு உள்ள கல்வி முறை சரியில்லை.
ஏட்டு சுரைக்காய் கறிக்கு உதவாது என்ற முன்னோரின் கூற்றுப்படி தான் தற்போதைய கல்வித்துறை உள்ளது.

சுரைக்காய் எப்படி இருக்கும் என்பதை மட்டும் தான் இந்த கல்வி சொல்கிறது.
அதை எப்படி விளைவிப்பது என்பதை சொல்லி தரவில்லை

குழந்தைகள் பல்வேறு சிந்தனை உள்ளவர்கள், அவர்களின் சிந்தனைகள் ஒரே மாதிரி மாற்றப்படுகிறது. இன்றைய கல்வி நிறுவனங்களால் அவர்களின் சிந்தனைகள் நொறுக்கப்படுகிறது.

மனிதனுக்கு ஒரு நாளைக்கு பல்லாயிரக்கணக்கான எண்ண ஓட்டங்கள் தோன்றுகிறது. அவற்றின் வெளிப்பாடு தான் கவிதை, கட்டுரை, கதை, நடனம் மற்றும் அறிவியல் கண்டுபிடிப்புகள்.

இந்த எண்ணங்கள் கண்டறியப்பட வேண்டிய இடமாக தான் கல்வி நிறுவனங்கள் இருக்க வேண்டும். ஒரு மனிதன் வாழ தேவையானவை எவை, இந்தியாவில் சேவையாக இருந்த கல்வி வியாபாரமாக மாற காரணம்?

வேலை, வேலை என்ற ஒன்றே சில நூறு ஆண்டுகளுக்கு முன்பு வந்தது தான். அதுவரை அவர் அவரவர் தனக்கு தெரிந்த தொழிலை செய்து அதில் வந்த விளைப்பொருள்களை அதாவது பண்டங்களை மாற்றிக் கொண்டனர்.

பணம் என்ற ஒன்று வந்த பிறகு தான் இவை மாறியது. இன்றைய கல்வி நிறுவனங்கள் மாணவர்களை பன்னாட்டு நிறுவனங்களின் அடிமைகளாக மாற்றுகிறது.

முன்னோர்கள் கற்ற குருகுல கல்வியில் பல்வேறு முரண்கள் இருந்தாலும் அவர்களிடம் கற்ற மாணவர்கள் தான் இன்றுவரை கண்டறிய முடியாத தொழில்நுட்பங்களைக் கொண்டு கல்லணை, பெரிய கோவில், குடவரைக் கோயில்கள் இன்னும் பல.

இன்றைக்கு எதுவுமே படிக்காத, பள்ளி படிப்பை பாதியில் நிறுத்திய பலர் தான் பல பன்னாட்டு நிறுவனங்களின் உரிமையாளர்கள்.

ஜாக் மா ,பில் கேட்ஸ், மார்க் ஸுகர்பேர்க்,
இன்னும் பல, அறிவியல் துறை எடிசன் , ஜி டி நாயிடு. இன்று உலகின் மிக சிறிய செயற்கை கோள் கலாம் சாட். கண்டுபிடித்த மாணவன் உங்கள் பார்வையில் ஒரு சராசரி மாணவன் தான்.

விளையாட்டு சச்சின், கோலி, டோனி,
அரசியல் காமராசர் இன்னும் பல்வேறு துறைகளில்
பல்வேறு திறமையானவர்கள் படிக்காதவர்களே.

இனியாவது படிப்பை முன்நிறுத்தாமல் அவர்களின் திறமையைக் கண்டறியுங்கள்

இந்த சமூகம் முன்னேறும்

நன்றி

**சி.அருள்பாண்டியன்**
( தொழில் முனைவர் e-commerce )
பூவனூர்
தொடர்புக்கு
பகிரி 8973204042
மின்னஞ்சல்: Pandiana849@gmail.com

## ஆசையழிவு

ஆசைக்கேற்ப இவ்வுலகத்தை
நாம் மாற்றியமைத்தோம்.

ஆனால் இந்த ஆசைகளே
இவ்வுலகத்திற்கு பேரழிவாக அமைய போகிறது.
இந்த அச்சம் இருக்கிறதா மனிதனுக்கு

--

**பா. தமிழ்பிரியன்,**
உள்ளிக்கோட்டை

# நெகிழியாகிய நான்!

நெடுநாள்களாக
நெகிழிந்து வந்தேனே
நெகிழியான நான்

எல்லோர் பயன்பாட்டுக்கும்
எளிதானவன் நான்

சில சமயங்களில் பலூனாக
சிறுவர்கள் கையில்.
பல சமயங்களில் தோழனாக
பெரியவர்கள் கையில்.
என்னால் நாட்டுக்கு தீது
என்பதால் தடை செய்ய
பட்டுவிட்டேன்

கர்வம் அதிகமானதால்
மேலும் மேலும் பறந்து
குப்பைத்தொட்டியில்
விழுந்துவிட்டேன்.

நான் எழ முயற்சிக்கும்
முன்பே மஞ்சப்பை வந்துவிட்டது.

ஒவ்வொரு இல்லங்களின்
ஆணிகளிலும் மங்களகரமாய்
அணிவகுக்கிறது மஞ்சப்பை!

என்னை பயன்படுத்தினால்
அபராதம் என்பதால் மறந்தேனும்
தொட மறுக்கிறார்கள்.

நான் இப்போதும்
பறந்து செல்கிறேன்

ஆனால் அனைவர் கைகளிலும்
மஞ்சப்பை தவழ்ந்து
செல்கிறது.

--
தர்ஷினி நாகூரான்

ஓவியம்
S. ஹரிதா
LKG
SBV பள்ளி





முனைவர். சா.சம்பத்
மன்னார்குடி

# இணைந்தே இருப்போம்..!?

மனித நெஞ்சம் அழுகிறது...!
பழி தீர்த்த இயற்கையால் !
அன்பு மழலை அழுகிறது
அதி தீவிர கஜா புயலால். ! ?

தேடுகிறது ஆட்சியாளர்களை
மூடுகிறது பயத்தில் விழிகளை ! ,?

நாடுகிறது உதவிடும் நண்பர்களை....!
ஏங்குகிறது உறைவிடம் தெரியாமல்..!?

மலைபோல் குவித்தது.. குப்பைகளால்...!
பாலைவனம் ஆனது அழிந்த குடிசையால் !?
வீடாகிறது வீதிகளும் பள்ளிகளும்...!?

கண்ணீர் வழிகிறது..
ஏழையின் ..
விழிகளில்..!?

வேற்றுடை இல்லை அணிந்திட
மாற்றிடம் இல்லை
வாழ்ந்திட ..! ?

தோற்றது சாதிமத பேதமிங்கு..!
வென்றது மனிதநேயம் எங்கெங்கும்,..!?

நல் இதயங்கள்
ஆற்றின மானுட காயங்கள்...!?
செழுதிட்ட.. சமத்துவம் ...!
தழைத்திட்ட ஒற்றுமை
நிலைக்க ..,,!

சமதர்ம சமுதாயம் வாழ்ந்திட
இணைந்தே இருப்போம்..!? இவ்வுலகில் ..
என்றென்றும்...!?

# ஈரக்குலையே நடுங்குதய்யா...

என்ன சொல்லியும் கேட்காம
என் மகளும்
எழவு எடுக்கும் நீட் தேர்வ
எழுதத்தான் ஆசைபட்டா . . .
கஞ்சிக்குடிக்க இல்ல . . .
கா காணி நிலமுமில்லை . . .
ஏழைக்கூலி நான்
காவிரி கைவிரிப்பால
கட்டட வேலை பாக்குறேன் . . .
வருகிற வருமானத்துல
எம்புள்ள குட்டிக
கால் வயிறு நனைக்குதுங்க . . .
எம்புள்ள தமிழ்க்கொடி
எங்க ஊரு அரசுப் பள்ளில
எல்லா பாடத்துலயும் முத மார்க்
வாங்குனதுங்க. . .
பாவி மகள
பத்தாம் வகுப்போட
நிறுத்தத் தான் சொன்னேங்க . . .
சிறுவாடு காசு வச்சுருக்கேன்
நோட்டு புக் வாங்கிகுறேன்னு
தானாப் பள்ளியில சேர்ந்ததுங்க . . .
சுகமில்லா அம்மாவ கவனிச்சுட்டு . . .
வீட்டு வேலையெல்லாம் முடிச்சு
வச்சு...
மணி அடிக்கும் நேரத்துல ஓடுமுங்க...
விடியும் வரை புத்தகமும் கையுமா
படிக்குமுங்க. . .
எம்புள்ள நல்லா படிக்குதுன்னு
எல்லா டீச்சரும் புகழுவாங்க . . .
எங்கம்மா மாறி சுகமில்லா
எல்லார் அம்மாவையும்
காப்பாத்துவேன்
மருத்துவராகப் போறேன்னு . . .
எல்லா பிள்ளைகளிடமும் சொல்லி
மகிழுதுங்க . . .
என்ன சொல்லியும் கேட்காம
என் மகளும் நீட் தேர்வ
எழுதத்தான் ஆசப்பட்டா . . .
வருகி வருமானம் வயித்துக்கே
பத்தலையேன்னு
வருத்தமுற்று நிக்கையில . . .
இரண்டாயிர மைலுக்கப்பால
இராசஸ்தான்ல போட்டுருகாங்கன்னு
சொன்னதுங்க . . .
எழவெடுத்த நீட் தேர்வ
எழுதித்தான் ஆகனுமான்னு
கேட்டதுக்கு . . .
மூஞ்சத்தூக்கி வச்சுகிட்டு
தேம்பி தேம்பி அழுதுங்க . . .
இரயில்ல போன எத்தனை நாள்
ஆகும்னு
எனக்கொன்னும் தெரியல . . .
பணத்துக்கு எங்கேப் போவதுன்னு
எனக் கொன்னும் புரியல . . .
என்னச் சொல்லியும்
கேட்காம என் மகளும்
மருத்துவராக ஆசைபட்டா
பாவி மக எனக்குப் புள்ளையா
பொறந்துத் தொலைச்சுட்டா .. .
அரியலூர் அனிதா புள்ள
கதையாயிடுமோன்னு . . .
என் ஈரக்குலையே நடுங்குதய்யா . . .



முனைவர் வ.சிவகுமார்
சுந்தரக்கோட்டை

99763 71747
vasiva1711@gmail.com

# அன்புள்ள வாசகர்களுக்கு,

பாட்டி வடை சுட்டு அதை, காக்க அந்த வடையை திருடிய கதையும், நமக்கு தெரியும், அதை மீண்டும் மீண்டும் கேட்க தோன்றினால், யார் சொல்லுவார் நமக்கு? இது போல எத்தனை பேருக்கு எத்தனை கதைகள் பிடிக்கும், அந்த கதைகளை, அந்த கட்டுரைகளை யாராவது நமக்கு கேட்க தோன்றும் போதெல்லாம், தூங்கப்போகும் போது, சோர்வடைந்து சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து இருக்கும் போது படித்தாலோ, சொன்னாலோ எவ்வளவு சந்தோஷம் தரும் நமக்கு. எத்தனை அருமையான கதைகள், கட்டுரைகள், எத்தனை ஆய்வுகள் இருக்கு படித்துச்சொல்ல தான் ஆள் இல்லை, படிக்கவும் நேரமில்லை.

வடை திருடிய காகத்திற்கு சிறு அபராதம் கொடுப்போம் இப்போது, இத்தனை படைப்புகளுக்கும் ஒலி வடிவம் கொடுத்து இசை சேர்த்து, கேட்க நினைக்கும் போதெல்லாம் நமக்கு அந்த கதைகளை படித்து சொல்ல வேண்டும் என்று செயலி வடிவில் நம் கைபேசியில், நம் கணினில். ''காகம்'' ( caagam ) நமக்கு கேட்கத் தோன்றும் படைப்புக்களை கதையாக, கட்டுரையாக, செய்தியாக நமக்கு தர வருகிறது.

அழைப்பு: படைப்பாளிகள் மற்றும் தமிழில் குரல் வளம் உள்ளவர்கள் வாருங்கள் !

தங்கள் கதைகளை ஒலி புத்தகமாக மாற்ற நாங்கள் விரும்புகிறோம், நல்ல கதைகளையும் கட்டுரைகளையும் அந்த அந்த படைப்பாளிகளின் குரலில் ஒலி புத்தகமாக எங்கள் ஒலி புத்தக மென்பொருள் CAAGAM மூலம் உலகில் உள்ள அனைத்து தமிழர்களுக்கு கொண்டு செல்ல ஆவலுடன் இருக்கிறோம். தாங்கள் தங்கள் தமிழ் படைப்புக்களை தங்கள் கை பேசியில் அல்லது கணினியில் ஒலிப்பதிவு செய்து எங்களுக்கு infobalacbe@gmail.com, மற்றும் Srikanthd@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள்.

நாங்கள் நடத்தும் குரல் தேர்வில் பங்குபெற, நீங்கள் எழுத்தாளராக இருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை. நன்றாக, சரளமாக, அழகான உச்சரிப்புடன், வார்த்தைகளுக்கு ஏற்ற உணர்ச்சியை எடுத்துரைக்கும் குரல் வளம் இருந்தால் தாங்கள் எங்களுடன் சேர்ந்து பணியாற்றலாம். தங்களுக்கு பிடித்த கதை அல்லது கட்டுரை அல்லது செய்தித்தாளில் ஒரு சிரு பகுதியை வசித்தது தங்கள் கை பேசியில் அல்லது கணினியில் ஒலிப்பதிவு செய்து எங்களுக்கு infobalacbe@gmail.com, மற்றும் Srikanthd@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்புங்கள். (பின்புற இரைச்சல் பற்றி கவலை பட வேண்டாம்.)

<u>வாருங்கள் கதை சொல்லலாம் !</u>

# சிறிய பையில், பெரிய பயணம்

சுள்ளென்று வெயில் அடிக்க, திருநெல்வேலியில் இருந்து மன்னார்குடி செல்ல ராசபாளையம் வழி பேருந்தில் சென்று அமர்ந்தேன். இந்த பேருந்து தான் குறைந்த நிறுத்தங்களில் மட்டும் நிறுத்தும் மற்றும் நேரத்திற்கு வந்தடையும் என்று என் தோழர் கூறியதால் நம்பி இருக்கையில் அமர்ந்தேன். என்னுடன் சேர்த்தே மூன்று பேர் தான் பேருந்தில் இருந்தோம்.

எப்பொழுது பேருந்தை எடுப்பார்கள் என்று நினைத்துக்கொண்டே வெளியில் பார்த்துக் கொண்டு இருந்தேன்.

தம்பி இந்த பேருந்தை எப்ப எடுப்பாங்க என்றார் ஒரு முதியவர் என்னைப் பார்த்து.

சிகப்பு, மஞ்சள் நிறம் கலந்த பையொன்றைக் கையில் வைத்துக் கொண்டு வெள்ளை வேட்டியுடன், சுமார் 55 வயது மதிக்கத்தக்க வகையில் தலை முடியெல்லாம் வெட்டி முதுமையிலும் அழகாக இருந்தார்.

சீக்கிரம் எடுத்துடுவாங்க ஐயா என்றேன் அவரிடம்.

சரியான வெயிலு இவனுங்க வேற எப்ப எடுப்பாங்கனு தெரியல என்று தன்னுள் புலம்பிக் கொண்டு இருந்தார்.

எந்த ஊர் போகணும் ஐயா என்றேன்.

கம்பம் போகனும், பையன் இருக்கான். ஒரு நாள் தங்கிட்டு, அங்க இருந்து கோயம்புத்தூர் வரைக்கும் தங்கச்சி வீட்டுக்குப் போகணும் என்றார்.

நீதிமன்றத்தில் நீங்களும் வாதாடலாம் என்ற தலைப்பில் ஒரு நூலை முன் பேருந்தில் விற்றவரிடம் வாங்கி இருந்தேன், பயணத்தின் பொழுது படிக்கலாம் என்று.

பேருந்து ஒரு வழியாக கிளம்ப, நூலை எடுத்து வாசிக்க தொடங்கினேன். எளிய மனிதர்களுக்குப் புரியும் வகையில் அதன் ஆசிரியர், நீதிமன்றம் மற்றும் காவல் துறை பற்றியும் எழுதி இருந்தார். ஒரு வழக்கு தொடர வெறும் இரண்டு ரூபாய் இருந்தால் போதும் என்று குறிப்பிட்டுள்ளதைப் படித்ததும் மேலும் படிக்க வேண்டும் என்ற ஆர்வத்தை என்னுள் விதைத்தது.

தொடர்ந்து படிக்கும் பொழுது

அந்த முதியவர் என் இருக்கைக்கு அருகில் இருந்த இடத்தில் வந்து அமர்ந்து பேச தொடங்கினார்.

நான் எங்கே செல்கிறேன் என்பது பற்றி பேசினார். பதில் அளித்த பின் மீண்டும் அந்த நூல் என்னை அழைத்துக் கொண்டதுப் படிக்கச் சொல்லி.

அதை, விட மனமில்லாமல் தொடர்ந்தேன்.

முதியவர் மீண்டும் தன்னுடைய இருக்கைக்குச் சென்று எதிரில் இருந்த ஒருவரிடம் தன்னை பற்றி பேச கொஞ்ச நேரத்தில் அவருடன் பேசிக் கொண்டு இருந்தவர் அவரின் நிறுத்தம் வந்ததும் இறங்கிச் சென்று விட்டார்.

என்னால் அவரின் சூழ்நிலையை உணர முடிந்தது.

கையில் இருக்கும் நூலைப் பின்பு படிக்கலாம், இருக்கையில் இருக்கும் நூலை இப்பொழுது படித்தால் தான் உண்டு என முடிவெடுத்து கையில் இருந்த நூலை பையில் வைத்துவிட்டு அவரிடம் பேச தொடங்கினேன்.

உங்க சொந்த ஊர் திருநெல்வேலியா என்று கேட்டேன் முதியவரை நோக்கி.

இல்ல தம்பி. நான் கம்பம் தான், இங்க பேத்தி வீட்டுக்கு வந்துட்டுப் போறேன்.

சரி பேத்தின்னு சொல்றாரே குழந்தைகளை பார்த்துவிட்டு செல்கிறார்கள் என்று நினைத்தேன்.

கொஞ்சம் பேத்தி கூட பிரச்சனை, அதான் இப்ப எங்க போறதுன்னு தெரியாம அப்படியே போறேன் என்றார்.

உங்க பையன் வீட்டுக்கு போறது தானே என்றேன் நான்.

அங்க போன என் மருமகளுக்கு பிடிக்காது, அதான் தங்கச்சி வீட்டுக்கு போகலாம்னு நினைக்கிறேன். ஆனா கோயம்புத்தூர் பக்கம் போகணும், ஆனா முகவரி இல்ல இப்ப என்றார்.

குழப்பத்துடன் இருக்கிறார் என்பதை மேலும் உணர்ந்தேன்.

பேத்தி கூட பிரச்சனையா? சின்ன பசங்க தானே ஐயா புரிந்து கொள்வார்கள் என்றேன்.

இல்ல தம்பி அவளுக்கு 30 வயசுக்கு மேல ஆயிட்டு. பேத்தி நல்லாத்தான் பார்த்து

கிட்டா. ஆனா என்ன நமக்கு தான் எதுவும் ஒத்துவர மாட்டேங்குது என்றார்.

பேத்திக்கு 30 வயது என்றவுடன், முதியவரின் வயதை கேட்டேன் நான்.

அதற்கு, எனக்கு 74 வயசுப்பா. 8 வருசத்துக்கு முன்னாடியே மனைவி தவறிட்டாங்க.

அவ போய்ட்ட அப்புறம், நான் இப்படி ஒவ்வொரு ஊரா போயிட்டு இருக்கேன் என்றார்.

74 வயது போல் அவர் தோற்றம் பிரதிபலிக்கவில்லை. இளமையாக, திடகாத்திரமாக இருக்கிறீர்கள் என்றேன்.

புகைபிடிக்க மாட்டேன், தண்ணி அடிக்க மாட்டேன், காலையிலேயே எழுந்துவிடுவேன். பின்பு குளித்துவிட்டு ஒரு சிறு நடைப்பயணம் செல்வேன். காளியம்மன் எனக்கு மிகவும் பிடித்த கடவுள், தொடர்ந்து வழிபடுவேன்.

ஒரு நாளைக்கு, ஒரு மணி நேரம் தான் தம்பி தூக்கம். முன்னாடியெல்லாம் நாலு, அஞ்சி மணி நேரம் தூங்குவேன். அப்புறம் மூணு மணி நேரம். இப்ப என்னான்னா ஒரு மணி நேரம் தான் தூக்கம் என்றார் சிரிப்புடன்.

உங்க சொந்த ஊரிலேயே இருக்கலாமே, ஏன் இப்படி என்றேன் சொற்களை விழுங்கி கொண்டே, அவரை எந்த விதத்திலும் காயப்படுத்திவிட கூடாது என்று.

என் மகனுக்கு வீட்டை விற்றுப் பணம் கொடுத்துவிட்டேன். அதில் அவன் இப்ப கேரளாவில் வீடு வாங்கி விட்டான். எனக்குன்னு இப்ப தனியா வீடு கிடையாது. அதான் இப்படி எங்க போறதுன்னு தெரியாம போய்கிட்டு இருக்கேன் என்றார்.

அப்ப செலவுக்கெல்லாம் என்றேன்.

நான் மின்சார துறையில் வேலை செய்து ஓய்வு பெற்றவன். அதனால் எனக்கு ஓய்வூதியம் கிடைக்கிறது தம்பி. அதுல வர பணத்தை வச்சிக்கிட்டு ஒட்டிக்கிட்டு இருக்கேன். அப்பப்ப மகனுக்கு, இரண்டு பொண்ணுங்களுக்கு 2000 ரூபாய் கொடுப்பேன். என்னால முடிஞ்சது என்றார்.

இருக்க ஒரு இடம் கொடுக்காமல் அலையவிட்டாலும், பெற்ற பிள்ளைகளுக்கு 74 வயதிலும் ஒரு உதவுகிறார் எனும் பொழுது மகிழ்வதா இல்லை இப்படிப்பட்டவரை அலையவிடும் பிள்ளைகளை நினைத்து வருந்துவதா என்று தெரியவில்லை எனக்கு.

உங்க பொண்ணுங்க வீட்டுல போய் இருக்கலாமே ஐயா என்றேன்.

அதற்கு, அங்க போனா நல்லா இருக்காது தம்பி. அதுவும் இரண்டாவது மருமகனுக்கு என்ன பிடிக்காது. அவர் கொஞ்சம் வசதியானவர் கூட என்றார்.

தன்மானத்தை சுமந்து செல்பவர்கள் எப்படி இருப்பார்கள் என்பது அவர் பேசும் பொழுது தெரிந்தது. பிள்ளைகள், மருமகள், மருமகன் என்று யாரையும் கெட்டவர்கள் என்று சொல்லவில்லை. அவர்களுக்கு இவரை பிடிக்காது என்று மட்டும் முன் வைத்தார்.

30 ஆண்டுகள் பொள்ளாச்சில இருந்தேன் தம்பி. ஓய்வு பெற்றப்பின் கம்பம் வந்தேன். ஆனா இப்ப வீடுகூட இல்ல என்றார்.

நீ மட்டும் இருக்குற மாதிரி ஒரு வீடு வாடகைக்கு பாருங்க கம்பத்திலேயே என்றேன் நான்.

முன்னாடி குடும்பமா இருந்தோம். இப்ப நான் தனி ஆளுங்கிறதால யாரும் வீடு கொடுக்க மாட்டேங்கிறாங்க. நானும் உள்ளூர்லேயே கேட்டேன் ஆனா எந்த பலனும் இல்லை என்றார்.

பேருந்தும் ராசபாளையத்தை நெருங்கியது.

சரி ஐயா. கைப்பேசியில் இருக்குற பசங்க, இல்லாட்டி வேண்டியவங்க இலக்கத்தை காகிதத்துல எழுதி வச்சிக்குங்க. கைப்பேசி வேலை செய்யலைன்னா அதில இருந்து எடுத்து பேசிக்கலாம் வேறு யார் மூலமாவது என்றேன்.

சரி தம்பி என்றார்.

அப்புறம், நீங்க எங்க போறதுன்னு தெரியாம போய்கிட்டு இருக்கேன்னு யாருகிட்டேயும் சொல்ல வேண்டாம். உங்க அனுபவத்தை சொல்லுங்க பரவாயில்லை பயண களைப்பு தெரியாம இருக்கும். உங்களுக்கு நான் ஏன் சொல்கிறேன் என்று புரியும் என்றேன்.

புரியுது தம்பி, நானும் இறங்கி அப்படியே சாப்பிட்டு கிளம்புறேன் பேருந்து நின்ற உடன் என்றார்.

பேருந்து, ராசபாளையம் பேருந்து நிலையம் நுழைவுப் பகுதியை எட்டியது.

பையை கையிலேயே வச்சுக்குங்க, நடத்துனரிடம் எவ்வளவு நேரம் நிறுத்தி இருப்பீங்க இங்க என்று நிறுத்தும் போதெல்லாம் கேட்டுவிட்டு, பேருந்தின் இலக்கத்தை குறித்து கொண்டு, அருகில் இருக்கும் கடைகளைப் பார்த்துவிட்டுச் செல்லுங்கள் என்றேன்.

வீடு இல்லை, உறவு இல்லை, வயதும் இல்லை ஆனாலும் பன்மடங்கு நம்பிக்கையுடன் பயணித்தார் யாரையும் குறைகூறாமல்.

சிறிய பையில் பெரிய பயணத்தை அடைத்துக் கொண்டு, எல்லாவற்றையும் கூறிய முதியவர் தன்னுடைய பெயரை மட்டும் என்னிடம் கூறாமல் சென்றார்.

--
## மன்னை மதி



ஓவியம்
S. நிகிதா
LKG
SBV பள்ளி

# திசை மாறும் அம்புகள்

இன்றைய தினம் அதிக பிரச்சனைகள் யாருக்கு உள்ளது என்று யோசித்தால் அனைவரும் முதலில் எண்ணுவது அவர்களுடைய பிரச்சனைகளை தான்.

எனக்கே ஆயிரம் பிரச்சனை, இதில் நான் எப்படி சமூக பிரச்சனைகளுக்கு குரல் கொடுக்க முடியும் என்று எண்ணி விலகி நிற்பவர்கள் மத்தியில், எண்ண முடியாத அளவிற்குப் பிரச்சனைகளை எதிர்கொண்டு சமூக சிந்தனையுடன் பயணிக்கும் தோழமைகளுக்கான கட்டுரை இது.

ஊடகம், சமூக ஊடகம் என்று அனைத்து தளங்களில் பல கேள்விகள் முன் வைக்கப்படுகிறது. கேள்விகளுக்கு பதிலாகவும், கேள்விகளுக்கு எதிர் கேள்விகளாகவும் பெற்றுக் கொண்டு இருக்கிறோம். ஆனால் இதுவெல்லாம் தீர்வை தருகிறதா என்றுப் பார்த்தால் பெருமளவில் இல்லையென்றே கூறலாம்.

ஏன் என்று பார்க்கலாம் இதோ.

இணையம், கைப்பேசி வசதி இல்லாத காலத்தில், நாளேடுகளைப் படித்துவிட்டு தேநீர் நிலையங்களில் கேட்கப்பட்ட கேள்விகள் தான் இன்று சமூக ஊடகங்களில் கேட்கப்படுகிறது என்பது உண்மை.

அன்று கேட்கப்பட்ட கேள்விகள், தேநீர் நிலையம் சென்று வந்த சிலரை சென்று அடைந்தது. அதன் மூலம் மேலும் சிலரை சென்று அடைந்தது, அதற்கு மேல் கொண்டு செல்ல வழிகளோ, பணம் இல்லை எளியவர்களிடம்.

இன்று அப்படி இல்லை, நாம் உலகின் எந்த மூலையில் இருந்தாலும் நம்முடைய கேள்விகளை, எண்ண ஓட்டத்தை பலரின் மூளைக்கு இருந்த இடத்தில் இருந்தே எடுத்துச் செல்லலாம்.

இதை பலரும் செய்யவும் தொடங்கிவிட்டார்கள். ஆனால் இவைகளை எப்படி ஒழுங்குபடுத்தி அடுத்த கட்டத்திற்கு எடுத்துச் செல்வது என்பது தான் சவாலாக உள்ளது நம்மில் பலருக்கு. காரணம் எண்ண சிதறல்கள், கண் முன் அன்றாடம் தோன்றும் பிரச்சனைகள் நம்மை திசை திருப்புகிறது.

உதாரணத்திற்கு காவிரி மேலாண்மை பிரச்சனை பற்றி கருத்துகளை முன் வைத்தால், சிலை உடைப்பு, தேனீ காட்டு தீ பிரச்சனை என்று வருகிறது. மறுமுனையில் மருத்துவ மேற்படிப்பில் இருந்து எளியவர்கள் நெருங்க முடியாதபடி கல்வியில் கட்டுப்பாட்டை மாற்றுகிறார்கள்.

இது தான் இன்றைய நிலை. நாம் ஒன்றிற்கு குரல் கொடுத்து கொண்டுள்ள பொழுதே அரசு நம்மை மறுமுனையில் ஒடுக்குகிறது. இதற்கென்னதான் வழி, வாழ்நாள் முழுவதும் போராடிக் கொண்டு தான் இருக்க வேண்டுமா? என்று பலரும் சமூக பணியில் இருந்து தொய்வடைந்து விலகி செல்கிறார்கள்.

இது நம்மை ஒடுக்குபவர்களுக்கு வசதியாக போய்விடுகிறது. சில நாட்கள் போராடுவார்கள், பின் தானாகவே விலகி சென்று விடுவார்கள் என்பதை அறிந்து வைத்துள்ளார்கள். இதனால் தான் தொடர்ந்து பல பிரச்சனைகளை உருவாக்கிக் கொண்டே உள்ளார்கள்.

நாம் அனைவரும் ஒன்றிணைவதை விட, நாம் சிந்தனைகள் அனைத்தும் ஒன்றிணைய வேண்டும்.

முதலில் கேள்விகளை திசை திருப்பாமல் சரியான இடத்தை நோக்கி கேட்க வேண்டும். உதாரணத்திற்கு திரைத்துறை நபர்களை நோக்கி கேட்கும் கேள்விகளை முற்றிலும் தவிர்க்க வேண்டும். நாம் ஒவ்வொருவரும் வேலைக்குச் செல்வதுப் போல் தான் அவர்கள் திரைக்கு செல்கிறார்கள், அங்கு பணிபுரிகிறார்கள்.

திரைத்துறை நபர்கள் அரசியல்வாதிகளாக இருந்தால், அரசில் பங்கு வகித்தால் மட்டும் அவர்களிடம் நாம் நம்முடைய கேள்விகளை முன் வைத்து விவாதிக்கலாம்.

அரசியல்வாதிகள் எதிர்கொள்ள வேண்டிய கேள்விகள், திசை மாறி திரைத்துறைக்கு செல்கிறது என்பதால் அவைகளை கண்டுக்கொள்ளாமல் அலட்சியமாக உள்ளார்கள். இதனால் நம்முடைய நேரமும் விரயமாகிறது, அரசில் அங்கம் வகிப்பவர்களும் அவர்களின் பணிகளை செய்யாமல் தப்பித்து வருகிறார்கள்.

அடுத்து எதிர்க்கட்சியை நோக்கி கேட்கும் கேள்விகளை விட, அதிகம் கேள்வி கேட்க வேண்டியது ஆளும் கட்சியினரிடம் தான். காரணம் அவர்கள் சரியில்லை என்று தான் புதியவர்களை தேர்ந்தெடுத்துள்ளோம். அதை மனதில் கொண்டு கையாள வேண்டும்.

மக்கள் எதிர்கட்சிகளை கேள்வி கேட்பதால், ஆளும் கட்சி அவர்கள் மேல் பழியைப் போட்டுத் தன்னுடைய பணியை செய்யாமல் விலகி நிற்கிறது. ஆளும் கட்சியில் உள்ளவர்கள் முன்பு இருந்தவர்களின், திறமையற்றவர்களின் செயல்பட்டால்தான் ஆட்சிக்கு வந்துள்ளோம் என்பதை உணர வேண்டும். அதற்கேற்றாற்போல் தீர்வுகளை தர ஆளும் கட்சியை நோக்கி கேள்விகளைக் கேட்க வேண்டும்.

தனிப்பட்ட நபர்களின் வாழ்க்கையைப் பற்றி பேசி, அவர்களின் ஆட்சியின் செயல்பாடுகளை கவனிக்காமல் விட்டுவிடுகிறோம்.

அரசியல்வாதிகள் புகைபிடிக்கிறார்கள், குடிப்பழக்கத்திற்கு அடிமை, நேரத்திற்கு வீட்டிற்கு செல்லமாட்டார், ஒன்றிற்கு பல திருமணம் செய்துள்ளார் என்று நாம் பலவற்றை விவாதிக்கிறோம். இதனால் எந்த பலனும் ஏற்பட போவது இல்லை.

இனி அது வேண்டாம். ஒவ்வொருவர் வீட்டிலும் பல பிரச்சனைகள் உள்ளது. அது போல் தான் அரசியல்வாதிகளின் குடும்பத்திலும். ஆக அதை தவிர்த்து அவர்களின் அரசியல் செயல்பாடுகள், திறம்பட ஆட்சி செய்கிறார்களா என்பதை கவனித்து அதற்கேற்றாற் போல் களத்தை வலுப்படுத்துவோம்.

இது வரை முறையற்ற வழிகளில் பணம் சேர்த்தவர்கள் அனைவரும் முறையாக உழைத்தே சம்பாதித்தார்கள் என்று நிலை நிறுத்திக்கொள்வோம். நாம் அதை பற்றி மீண்டும் மீண்டும் கூறுவதால் அனைத்தையும் அரசின் கருவூலத்திற்கு கொண்டு சென்று விடுவார்கள் என்று எண்ண வேண்டாம். அது ஒரு நாளும் நடைபெற போவது இல்லை. நமக்கும்  வேறு வழியில்லை.

நம்முடைய கேள்விகள் அனைத்தும் மத்திய அரசிற்கு தமிழகத்தில் இருந்து ஆண்டிற்கு எவ்வளவு தொகை வரியாக செலுத்தப்படுகிறது.  ஒவ்வொரு ஆண்டும் எவ்வளவு பணம் மத்திய அரசிடம் இருந்து தமிழகத்திற்கு பெறப்படுகிறது என்பதாக இருக்க வேண்டும்.

மற்றும் தமிழகத்தில் அரசிற்கு வரியாக எவ்வளவு பணம் ஆண்டிற்கு வசூலிக்கப்படுகிறது? அதில் அந்த ஆண்டு மக்களுக்கு எவ்வளவு தொகை செலவிடப்படுகிறது? போன்ற கேள்விகள் கேட்க வேண்டும்.

சென்னை, கோயம்பத்தூர், மதுரை, திருச்சி போன்ற மாநகரங்கள் முதல் ஒவ்வொரு நகராட்சிக்கும் அரசினால் ஒதுக்கப்படும் பணம் மற்றும் வரி பணம் பற்றியும் நம்முடைய கேள்விகள் இருக்க வேண்டும்.

நம்முடைய கேள்விகள் அனைத்தும் அம்பைப் போன்றது. அதை சரியான திசையை நோக்கி செலுத்தாவிட்டால் ஒரு நாளும் இலக்கை அடைய முடியாது.

சிறந்த கேள்விகளே, சிறந்த பதில்களை பெற்று தரும்.
போராட்டத்தில் பங்களிப்பு என்பது மருந்தை போன்றது, தேவைப்படும் பொழுது தான் தர வேண்டும். என்னுடைய வேலைகளை, பிரச்சனைகளை முடித்துவிட்டு தருகிறேன் என்றால் இறுதியில் பிணத்திற்கு தான் கொடுக்க வேண்டும்.

--

மன்னை மதி

## இ. சிவகார்த்தி





## பா. தமிழரசி

2ஆம் ஆண்டு, இளங்கலை தமிழ்
அ.வீரைய வாண்டையார் நினைவு ஸ்ரீ புஷ்பம் கல்லூரி, பூண்டி

## பிழைகள் இருக்கலாம் அதில் உங்கள் பிள்ளைகளாகிய நாங்கள் இருப்போம்

# திறவுகோல்

விலை மதிப்பில்லாத தங்கள் நேரத்தை ஒதுக்கி இந்த இதழை படித்த அனைவருக்கும் எங்கள் அணியின் சார்பில் நன்றியை உரித்தாக்குகிறோம்.

மன்னார்குடியில் இருந்து வெளியிடப்படும் முதல் மாத இதழ் இது. உள்ளூரில் இருக்கும் படைப்பாளிகளை அடையாளம் கண்டு அவர்களின் படைப்புகளை வெளி உலகிற்கு கொண்டு வரும் வண்ணத்தில் துவங்கிய மாத இதழ்.

நீங்கள் படித்த கட்டுரைகளில் ஏதும் பிழைகள் அல்லது முரண்பாடுகள் இருப்பின் உங்கள் விமர்சனங்களை முன் வையுங்கள். எதிர்காலத்தில் அதை கருத்தில் கொண்டு இன்னும் வலுவாக செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்கிறோம்.

---

நீங்கள் உங்கள் விமர்சனங்களை அனுப்ப
மின்னஞ்சல்: thiravukolfdbk@gmail.com
பகிரி: +91 8220567322

---

மன்னார்குடி படைப்பாளர்கள் தங்களின் படைப்புகள் சிறுகதை, கட்டுரை, கவிதை, ஓவியம் என எங்கள் இதழில் இடம் பெற செய்ய
மின்னஞ்சல்: thiravukolsubmit@gmail.com
பகிரி: +91 8220567322

---

தொடர்ந்து பகிரி வழியில் தங்கள் கைப்பேசிக்கே மின்னிதழை பெற
பகிரி: +91 8220567322

---

இணையம் மூலம் தரவிறக்கம் செய்ய
http://maintharkal.mannai.in

---

அடுத்த இதழில் இன்னும் சிறப்பான படைப்புகளுடன் உங்களை சந்திக்கிறோம்.

கி. மாணிக்கம்
திறவுகோல் ஆசிரியர் குழு

## 2015ம் ஆண்டு முதல்
## மன்னையின் மைந்தர்கள் குழுவின் பணிகள் ....

காவிரி, உரிமை மீட்பு குழுவின் பனங்குடி, இந்திய அரசின் பெட்ரோலிய ஆலை முற்றுகை போராட்டத்தில் மன்னையின் மைந்தர்கள் பிற போராட்ட குழுவுடன்

சீமை கருவேல மரம் அழிப்பு மன்னை தொடர்வண்டி நிலையம் அருகில்

இரத்த தான முகாம்

கடலூர் வெள்ள நிவாரண பணிகள்

பூமியை காப்போம் கருத்தரங்கம் (தேசிய மேல்நிலைப் பள்ளி - மன்னார்குடி)

நம்மாழ்வார் பூங்கா அமைத்தல் (தொடர் வண்டி நிலையம் அருகில் )

நெகிழி அழிப்பிற்கான விழிப்புணர்வு

தோழர் கு. முத்துகுமார் 7ம் ஆண்டு நினைவு நாள்

உயர்திரு. சகாயம் (இ.ஆ.ப.) அவர்கள் பங்குபெற்ற நமது வாக்கு! நமது உரிமை!! தேர்தல் கருத்தரங்கம்

தொடர்வண்டி நிலைய கருவேல மரம் அகற்றல் மற்றும் சமநிலைப்படுத்துதல்

உலக சுற்றுசூழல் தின அன்று தொடர்வண்டி நிலையத்தில் இருக்கும் கருவை மரங்களை அகற்றும் பணி நடைபெற்றது

ஜி. ஆர். தோப்பு சீமை கருவேல மரங்கள் அழிப்பு

மாணாக்கர்களுக்கு கையேடு, எழுதுகோல் வழங்கிய மன்னையின் மைந்தர்கள் குழு

<u>நம்மாழ்வார் ஏரியில் நடைபெற்ற பணிகள்</u>
சீமை கருவேல மரங்கள் அழிப்பிற்கு பின் தூர்வாரி மீட்டெடுத்தல்
பழைய சுவர்களில் வெள்ளையடித்தல்
நிலத்தடி நீர் அதிகரிக்க வேண்டி செய்த பணி
குழாய் பதிக்கும் பணி
விதை விதைப்பு, மரக்கன்றுகள் நடப்பு

திறவுகோல் மின்னிதழ் வெளியீடு

மன்னையின் மைந்தர்கள்
மண்ணின் மாற்றத்தை நோக்கி

## எங்களுடன் இணைந்து செயல்பட விரும்புவர்கள் தொடர்பு கொள்ளுங்கள்

**+91 8220567322**

http://maintharkal.mannai.in

MannaiyinMaintharkal    Thiravukolmagazine